

செங்கல்பட்டு மாவட்டம், தாம்பரம் மாநகராட்சி, பம்மல் மண்டலத்திற்குட்பட்ட 100 ஏக்கர் பரப்பளவு கொண்ட திருநீர்மலை பெரிய ஏரியை அரசு நிதி மற்றும் தனியார் பங்களிப்புடன் ரூ.13.20 கோடி மதிப்பில் புனரமைப்பு பணிகளை குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் துவக்கி வைத்தார். அருகில் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி, மேயர் க.வசந்தகுமாரி, துணை மேயர் கோ.காமராஜ், பகுதி செயலாளர்கள் வே.கருணாநிதி, த.ஜெயக்குமார் ஆகியோர் உள்ளனர்.



சென்னை வடக்கு மாவட்டம், பெரம்பூர் தெற்கு பகுதி, 44(அ) வட்டக்கழகத்தின் சார்பில் வட்டக்கழக பொறுப்பாளர் பெரம்பூர் எஸ்.அருள் தலைமையில் பகுதி கழக செயலாளர் க.ஜெயபாலன் முன்னிலையில் சென்னை வடக்கு மாவட்டக்கழக பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. தாகம் தீர்க்கும் தண்ணீர் பந்தலை திறந்து வைத்து நீர் மோர் மற்றும் பழங்களை வழங்கினார். இந்நிகழ்வில் மாவட்ட, பகுதி, வட்டக்கழக நிர்வாகிகள் மற்றும் கழகத்தினர் மற்றும் பொதுமக்கள் திரளாக கலந்துகொண்டனர்.

### இ.பரந்தாமன் எம்.எல்.ஏ. தலைமை! பெர்னாண்டஸ் ரத்தினராஜா முன்னிலை!

# வழக்கறிஞர் விஜய்போஸ் இல்ல விழா!

### ஆர்.எஸ்.பாரதி–டி.கே.எஸ்.இளங்கோவன்– ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. – பி.வில்சன் எம்.பி. – இரா.கிரிராஜன் எம்.பி. – ப.தாயகம்கவி எம்.எல்.ஏ. வாழ்த்து!

சென்னை, ஏப். 29- சென்னை கிழக்கு மாவட்டவழக்கறிஞர்அணி முன்னாள் துணை அமைப்பாளர்வழக்கறிஞர் திராவிடன் விஜய் போஸ் - வி.சுலோச்சனா ஆகியோரின் புதல்வி வி.அனித்தா மீகாளுக்கும் - சென்னை ஜோஸ் தேவக்குமார் - அனித்தா ஆகியோரின் புதல்வர் ஜோ.டேவிட் சாலமனுக்கும் திருமண நிச்சயதார்த்த விழா இன்று (29.4.2025 - செவ்வாய்) காலை 11 மணியளவில் கீழ்ப்பாக்கம், கெல்லீஸ் சி.எஸ்.ஐ.லைட் ஹாலில் நடைபெறுகிறது.

இவ்விழாவிற்குப்பெரம்பூர் சட்டமன்ற உறுப்பினர் இ.பரந்தாமன் தலைமை வகிக்கிறார். தமிழமகன் அரசின் டாம்கோ தலைவர் பெர்னாண்டஸ் ரத்தின ராஜாமுன்னிலைவகிக்கிறார்.

இவ்விழாவில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, கழக செய்தித் தொடர்பு தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன், சென்னைவடக்குமாவட்டச் செயலாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ., மூத்த வழக்கறிஞர் பி.வில்சன் எம்.பி., வழக்கறிஞர் ஆர்.கிரிராஜன் எம்.பி., ப.தாயகம் கவி எம்.எல்.ஏ. ஆகியோர் பங்கேற்று வாழ்த்துகின்றனர்.

இவ்விழாவில் கழக முன்னோடிகள், ஆன்றோர் சான்றோர் பங்கேற்று சிறப்பிக்கின்றனர்.

### கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

# அன்னம் தரும் அமுதகரம் 68 வது நாள்!

### துறைமுகம் தொகுதியில் - அமைச்சர் பி.கே.சேகர்பாபு உணவு வழங்கினார்!

சென்னை, ஏப். 29 - முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு "அன்னம் தரும் அமுதக்கரங்கள்" மாபெரும் திட்டத்தின் 68 ஆம் நாளான கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்த நாளை முன்னிட்டு நேற்று (28.4.2025) 1) துறைமுகம் கிழக்கு பகுதி வட்டம் 60அ அன்னை சத்யா நகர், ஏ.பி பகுதி, உணவு விநியோக கடை அருகில், சென்னை. 2)துறைமுகம் மேற்கு பகுதி வட்டம் 54ஆ - அம்மன் கோயில் தெரு, சுந்தரம் முதலி தெரு சந்திப்பு, வட்ட செயலாளர்.ஆர்.ரவிச்சந்திரன் ஆகிய பகுதிகளில் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு எதிர்காலத்தை



யும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தரமாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!" என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில் சென்னை பெருநகர மாநகராட்சி மேயர் பிரியா ராஜன் எஸ்.முரளி, எஸ்.இராஜசேகர், பி.ஸ்ரீராமுலு, இசட். ஆசாத், ஜி.எம். தேவன், எம்.விஜயகுமார், என்.பி.எம்.ஷேக்அப்துல்லா, இப்ராஹிம்கனி, ஆர்.கலைச்செல்வி, P.விஜயகுமார், எல்.சம்பத்குமார், பா.பிரதாப்குமார், எம்.விநாயகம், ப.ஜெகதீஷ் துறைமுகம் கிழக்கு / மேற்கு வட்ட கழக செயலாளர்கள்: எல்.சத்தியநாராயணன், எஸ்.புகழேந்தி, ஆர்.எ. அஸ்லாம், டி.கதிரவன் (எ) ராஜா,

எம்.பரத்குமார், கே.கவியரசு, ஆ.நா.பார்த்திபன், எம்.ஜெய்சங்கர், பா.கதிரவன், ஆர்.இரவிச்சந்திரன், ஜி.ராமமூர்த்தி, பா.அண்ணாதுரை, டி.சதிஷ்குமார், வே.பா.பிரபாகரன் ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, எஸ்.முரளி, பெரம்பூர் ஆர்.ராஜன், அபரஞ்சி, அசோக் ஜெயின், பி.விஜயகுமார், ம.அசோக்குமார், எல்.சம்பத்குமார், க.பா.பிரதீப்குமார் மற்றும் கழக நிர்வாகிகள் முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

# இராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனையில் 3.48 கோடி மதிப்பில் உபகரணங்கள்!

### அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன் – பி.கே.சேகர்பாபு பயன்பாட்டிற்கு திறந்து வைத்தனர்

சென்னை, ஏப். 29 -

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு அவர்கள் ஆகியோர் நேற்று (28.04.2025) சென்னை, அரசு மருத்துவக் கல்லூரி (ம) இராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனையில், ரூ.2.40 கோடி மதிப்பீட்டில் செவி எலும்பு அறுவை சிகிச்சைப் பயிற்சி திறன் ஆய்வகத்தினை திறந்து வைத்து, காது, மூக்கு, தொண்டை பிரிவு முன்னாள் இயக்குநர் பேராசிரியர் மரு. முத்துக்குமார் அவர்கள் இயற்றிய செவி எலும்பு அறுவை சிகிச்சைப் பயிற்சி திறன் கையேட்டினை வெளியிட்டார்கள். பிறது ரூ.14 இலட்சம் செலவில் பருவ வயதினர் சிகிச்சை மையத்தினை திறந்து வைத்து, ரூ.94 இலட்சம் செலவில் நீரிழிவு சிகிச்சை சிறப்பு மையத்தினை திறந்து வைத்து மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வந்தார்கள். பிறகு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

சென்னை ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் மூன்று புதிய சிகிச்சை அமைப்புகள் இன்று தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. இராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையை பொறுத்தவரை, இந்திய அளவில் எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கான மருத்துவ கட்டமைப்புகளும், மருத்துவர்களின் எண்ணிக்கையும், புறநோயாளிகளின் எண்ணிக்கையும், உள்நோயளிகளின் எண்ணிக்கையும் அதிநவீன மருத்துவ உபகரணங்களும் இருந்து வருவதை நாம் அனைவரும் நன்றாக நன்கு அறிவோம். அந்த வகையில் இந்த மருத்துவமனையின் கட்டமைப்பை மேலும் மேம்படுத்துவதற்கு செவி அறுவை சிகிச்சைக்கு செவி எலும்பின் அமைப்பு அதன் நுணுக்கமான உட்குறியல் மற்றும் கட்டமைப்புகள் பற்றிய முழுமையான புரிதலை ஏற்படுத்தும் வகையில் தமிழ்நாட்டில் இருக்கிற அரசு மருத்துவமனைகளில் பணிப்புரிகின்ற காது, மூக்கு, தொண்டை மருத்துவர்களின் அறுவை சிகிச்சை திறனை மேம்படுத்துகின்ற வகையில் செவி எலும்பு அறுவை திறன் ஆய்வகம் TEMPORAL BONE DISSECTION SKILL LAB ஒன்று ரூ.2.40 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு, இந்த செவி எலும்பு அறுவை சிகிச்சை திறன் ஆய்வகம் என்பது ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் இன்றைக்கு புதிதாக தொடங்கப்பட்டு தமிழ்நாட்டில் இருக்கின்ற பல்வேறு மருத்துவமனைகளில் தொடர்ச்சியாக இந்த மருத்துவ சேவை வழங்குதற்குரிய பயற்சி மருத்துவர்களுக்கு இங்கே வழங்கபட இருக்கிறது.

**வளரிளம் பருவத்தினருக்கான ஆலோசனை மையம் தொடக்கம்**

தமிழ்நாட்டை பொருத்தவரை ஏற்கெனவே அரசு மருத்துவ கல்வி மருத்துவமனைகளில் காது வால் அறுவை சிகிச்சை Cochlear implant என்கின்ற காது வால் அறுவை சிகிச்சை என்று சொல்லகூடிய மிக சிறப்பாக செயல்பட்டு வருகிறது. அந்த வகையில் செவி எலும்பு அறுவை சிகிச்சை ஆய்வகம் என்பது தமிழ்நாட்டில் ஒரு புதிய முயற்சி அந்த வகையில் தமிழ்நாட்டில் பணிபுரிகின்ற காது, மூக்கு, தொண்டை பிரிவு சிறப்பு மருத்துவர்களுக்கான பயிற்சிகளை வழங்குவதற்குரிய ஆய்வகம் இன்று தொடங்கி வைக்கப் பட்டிருக்கிறது. அதோடுமட்டுமல்லாமல் வளரிளம் பருவத்தினருக்கான ஆலோசனை மற்றும் சிகிச்சை பிரிவு இன்று தொடங்கப்பட்டுள்ளது. இருபாலருக்கும் வளரிளம் பருவத்தினருக்கான ஆலோசனை மற்றும் சிகிச்சைப் பிரிவு ரூ.14 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளது.

சனிக்கிழமைகளில் காலை 08 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரை நடைபெறும். பொதுமருத்துவம், குழந்தை மருத்துவம், மகப்பேறியியல் மற்றும் மகளிர் மருத்துவம், மனநல மருத்துவம், ஊட்டச்சத்து மற்றும் தோல் மருத்துவம், பாலியல் ரீதியாக பரவும் நோய்த் தொற்று ஆகியவற்றினை உள்ளடக்கிய பல்துறை அணுகுமுறைகளை இந்த சேவை மையம் வழங்கும். மருத்துவமனைகளின் வரலாற்றில் Clean Clinic என்று சொல்லக் கூடிய வளரிளம் பருவத்தினருக்கான ஆலோசனை மற்றும் சிகிச்சை பிரிவு இராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனையில் முதன்முறையாக தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. இளைய சமுதாயத்தினரிடையே இருக்கின்ற மது, புகை மற்றும் போதை பழக்கங்களினால் ஏற்படும் அபாயம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்திடும் வகையிலும், ஒழுங்கற்ற மாதவிடாய் சுழற்சிகள், பாலியல் ரீதியாக பரவும் நோய்த் தொற்றுகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்திடும் வகையிலும் இந்த அமைப்பு சிறப்பான வகையில் செயல்பட உள்ளது.

இந்நிகழ்வில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அரசு முதன்மைச் செயலாளர் முனைவர் ப.செந்தில்குமார், தேசிய நலவாழ்வு குழும இயக்குநர் மரு.அருண்தம்புராஜ், மருத்துவக்கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் மரு.சங்குமணி, சென்னை மருத்துவக் கல்லூரி முதல்வர் மரு.சாந்தாராம், துணை முதல்வர் மரு. கவிதா, நீரிழிவு நோயியல் துறை இயக்குநர் பேராசிரியர் மரு.தர்மராஜன், காது, மூக்கு, தொண்டை நிலைய இயக்குநர் பேராசிரியர் மரு.சுரேஷ்குமார், பேராசிரியர் மரு.பாரதி மோகன் மற்றும் மருத்துவப் பேராசிரியர்கள் உடனிருந்தனர்.

### சட்டப்பேரவையில் - 9 விதமான அறிவிப்புகளை வெளியிட்ட

# முதல்வருக்கு - ஒட்டுமொத்த ஆசிரியர்கள் சார்பில் நன்றி!

### சட்டப்பேரவையில் – அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பேச்சு!

சென்னை, ஏப்.29-

“9 வகையான அறிவிப்புகளை வெளியிட்ட முதல்வர் அவர்களுக்கு, ஒட்டு மொத்த ஆசிரியர்கள் - அரசு அலுவலர்கள் சார்பில் நன்றி!” என, சட்டப்பேரவையில் பேசிய பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு குறிப்பிட்டார்.

சட்டப்பேரவையில் அவர் பேசியதாவது:-

வாரி வழங்கக்கூடிய வள்ளல் என்று கடந்த 25 -ஆம் தேதி அன்று காலை 10 மணிக்குத்தான் சொன்னேன். இன்று 28- ஆம் தேதி காலை 10 மணிக்கு அந்த வாரி வழங்கக்கூடிய வள்ளல் 9 விதமான அறிவிப்புகள் இன்றைக்கு அறிவித்திருக்கிறார்கள். அதிலும் குறிப்பாக, எங்களுடைய ஆசிரியர் பெருமக்களுடைய நலன் சார்ந்திருக்கின்ற அந்த அறிவிப்புகளுக்கு உள்ளபடியே என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



கடந்த ஆண்டு, நம்முடைய அண்ணன் தா.மோ. அன்பரசன் அவர்களுடைய ஏற்பாட்டில் ஆசிரியர் தின விழா நடந்தது. காஞ்சிபுரத்தில் நடைபெற்ற ஆசிரியர் தின விழாவில் ஆசிரியர்களுக்கு விருது வழங்குகின்ற விழாவில் நம்முடைய துணை முதலமைச்சர் அவர்கள் கலந்துகொண்டார்கள்.

அதில், பேசிய தலைவர் ஒருவர் சொன்னார். எல்லா ஆசிரியர்களுக்கும் செய்ய வேண்டிய ஆசை இருக்கிறது. ஆனால், ஒரு தாயாக பால் கொடுக்கக்கூடிய அந்த தாய்க்கு கொஞ்சம் டெங்கு காய்ச்சல் இருக்கிறது. அது சரியானவுடன் கொடுப்போம் என்று சொன்னபோது, அதே மாதிரி நம்முடைய துணை முதலமைச்சர், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பேரப்பிள்ளை சொன்னார், டெங்கு காய்ச்சல் எல்லாம் இல்லை, அது சாதாரண காய்ச்சல்தான். விரைவில் சரியாகி அந்தத் தாய் உங்களுக்குப் பால் கொடுக்கும் என்று சொன்னார். உள்ளபடியே இன்றைக்கு அந்தத் தாய் இன்று பால் கொடுத்ததாகத்தான் கருதுகிறேன்.

எங்களுடைய ஒட்டுமொத்த ஆசிரியர், அரசு அலுவலர்கள் சார்பாக நம்முடைய தமிழ்நாட்டு முதலமைச்சர் அவர்களுக்கு எங்களுடைய நன்றிகளை நாங்கள் தெரிவித்துக்கொள்கிறோம். நன்றி.

இவ்வாறு அவர் பேசினார்.

### தி.மு.க. மகளிர் அணி

# சென்னை வடக்கு மாவட்ட வலைதள பொறுப்பாளர்கள் நியமனம்

### தி.மு.க. மகளிர் அணிச் செயலாளர் ஹெலன் டேவிட்சன் அறிவிப்பு

சென்னை வடக்கு மாவட்ட மகளிர் அணி வலைதள பொறுப்பாளர்களாக,

பா.சுரேகா, 141, துரை தெரு, மீனாட்சியம்மன் பேட்டை, இராயபுரம், சென்னை - 600013.

எஸ்.ஜெயா, பிஏ.,பி.எல்., 7, ராமலிங்கசாமி கோயில் தெரு, இராயபுரம், சென்னை600013.

ஜி.நிவேதிதா, பி.எஸ்சி.,பி.எல்.., 3, பிஎச்.ஐ.ஜி., திருவள்ளுவர் நகர், தண்டையார்பேட்டை, சென்னை 600081. ஆகியோர் நியமிக்கப்படுகிறார்கள்.

ஏற்கனவே நியமிக்கப்பட்ட மாவட்ட மகளிர் அணி நிர்வாகிகளுடன் இவர்கள் இணைந்து பணியாற்றுவார்கள்.

“அண்ணா அறிவாலயம்”
சென்னை - 18
நாள் : 28 - 4 -2025

**ஜெ. ஹெலன்டேவிட்சன்**
செயலாளர் -
தி.மு.க. மகளிர் அணி.



சென்னை தென்மேற்கு மாவட்டம் மயிலை கிழக்கு பகுதி இளைஞர் அணி சார்பில் தண்ணீர் பந்தல் மயிலை கிழக்கு பகுதி இளைஞர் அணி அமைப்பாளர் டி.ஜெகதீஷ் பாபு தலைமையில் 171 வது வார்டு மாமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் பகுதிச் செயலாளர்கள் எஸ்.முரளி, நந்தனம் கி.மதி, தூத்துக்குடி எஸ்.ஜோயல், ராஜா அன்பழகன் எம்.சி, துரைபார்த்திபன், கீதாமுரளி, த.விக்னேஸ்வரன் தினேஷ்மாணிக்கம், எஸ்.உமாசங்கர், சி.பிரகாஷ், எ. அஸ்வின்குமார், சீ.வி.திவான்குமார் மற்றும் தா.தீபன் வே.ஹேமந்த்குமார் பா.முருகேசன் ஏகுட்டி மு.நிரஞ்சன்சாய் சுந்தர் ரகு, வழக்கறிஞர் அபினேஷ் பாபு நீ.ஜெய்குமார் ந.உதயன் ர.இளையக்குமார் எ சூர்யா ஜெ.ராஜேஷ்குமார் அரவிந்த்ரமேஷ் கு.லோகேஷ் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### தி.மு.க. இலக்கிய அணி

# காஞ்சிபுரம் மாநகர அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

### தி.மு.க.இலக்கிய அணிச் செயலாளர் வி.பி.கலைராஜன் அறிவிப்பு

கழகத் தலைவர் அவர்களின் ஆணைப்படி மாவட்டச் செயலாளர் ஒப்புதலோடு காஞ்சிபுரம் மாநகர தி.மு.க. இலக்கிய அணியின் அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**காஞ்சிபுரம் மாநகரம்**

தலைவர் : ஜெ. காசிம்பாஷா , 52, ஐதர்பேட்டை தெரு, காஞ்சிபுரம்.. துணைத் தலைவர் : எம். மாதவன். 109/பி, காமராஜர் தெரு, காஞ்சிபுரம்.

அமைப்பாளர் : கி. குமரவேல். 52, மண்டபத் தெரு, பிள்ளையார்பாளையம், காஞ்சிபுரம்.

துணை அமைப்பாளர்கள் 1) ஜி.சந்தானம். 1, எல்லப்பன் நகர், 1வது தெரு, காஞ்சிபுரம். 2) ஆர்.வி. இளவரசன். 11/14/எ, ரெட்டிப்பேட்டைதெரு, காஞ்சிபுரம். 3) டி.அ. தாவூத் அலி. , தேரடித் தெரு, காஞ்சிபுரம். 4) ஆ. முருகன். 16பி, விஜய் கிராமணித் தெரு, காஞ்சிபுரம். 5) கு. சேகர். 53, ஜி. நாராயணபாளையம் தெரு, காஞ்சிபுரம். 6) சக்தி (எ) தனசேகரன். 43சி, ஆலடி பிள்ளையார் கோயில் தெரு, கீழ்கேட், காஞ்சிபுரம்.

“அண்ணா அறிவாலயம்”
சென்னை - 18
நாள் : 28 - 4 -2025

**வி.பி.கலைராஜன்**
செயலாளர் -
தி.மு.க. இலக்கிய அணி.



தமிழ்நாடு முதல்வர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு, மதுரவாயல் வடக்கு பகுதி,நெற்குன்றம் 145 வது வட்ட கழகம் மற்றும் நெற்கை டாக்டர் அம்பேத்கர் கைப்பந்து அணி இணைந்து நடத்திய தளபதி கோப்பை மாபெரும் இரண்டு நாள் தொடர் மின்னொளி கைப்பந்து போட்டி வட்ட கழக செயலாளர் நெற்கை ப.ஆலன் தலைமையில் பகுதி செயலாளர், நொளம்பூர் வே. ராஜன் முன்னிலையில் காரப்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ, ஆர்.கர்ணல் ஆகியோர் போட்டியை துவக்கி வைத்து பரிசு வழங்கினர். இதில் அனைத்து கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.